

உலகநாதர் அருளிய

# உலகநீதி

## ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | உலகநீதி |
| தெளிவுரை | : | ப்ரக்ஞுன் |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | உபதேசம் |
| முதற்பதிப்பு | : | 2018 |
| பக்கங்கள் | : | 18 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

உலகநாதர்

அருளிய

# உலகநீதி

தெளிவுரை

**ப்ரக்ஞன்**

# முன்னுரை

உலகநீதி ஒரு தமிழ் நீதி நூல். இந்த நூலை இயற்றியவர் உலகநாதர். 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூலில் 13 விருத்தப்பாக்கள் உள்ளன. உலகநீதி பாடல் வரிகள், தான் கூறும் அறிவுரைகளை எதிர்மறையாகவே கூறிச் செல்கிறது. இம்முறையை புலவர் கையாண்டதை, அவர் சொல்லும் கருத்தை வலியுறுத்தும் முயற்சியாக, எச்சரிக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட அறிவுரைகளாகக் கொள்ளலாம்.

இந்த நூலின் நோக்கம், உலக மக்களுக்குப் பொதுவான நீதிகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பது. பாடல்களின் ஒவ்வொரு அடியும் ஒரு நீதியை அறிவுறுத்துகிறது. பாடல் வரிகளின் மூலம் அனைவருக்கும் உலக நியதியை உபதேசமாக அருளுகின்றார். உலகநாதர் பற்றிய பிற தகவல்களோ, காலமோ, வரலாறோ அறிய முடியவில்லை.

இதை ஒட்டிய சுவையான தகவல் ஒன்றும் உண்டு. திரு. அருட்பிரகாச வள்ளலார் இளமையில் கல்வி பயிலும்பொழுது **"வேண்டாம், வேண்டாம்"** என்று முடியும் இப்பாடல் வரிகளைக் கண்டு வியப்புற்றாராம். ஏன் அறநெறிகளை "வேண்டும், வேண்டும்" என்று எழுதலாகாது என்ற எண்ணம் கொண்டு **"உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர் உறவு கலவாமை வேண்டும்"** என்ற பாடலை எழுதியதாகக் கூறப்படுகிறது.

உலகநீதி பாடலகளில் 66 வரிகளே உள்ள அறநெறிப் பாடல் வரிகளை சிறுவயதில் பொருள் புரியாமல் மனனம் செய்தாலும்கூட, வளர்ந்த பின்னர் வாழ்நாள் முழுவதும் நல்வழிப்படுத்தும் கருத்துரைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

தமிழிலக்கியம் தரும் நீதி நூல்களின் தொகுப்பில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்த நூல்களுள் உலகநாதர் இயற்றிய உலகநீதியும் ஒன்று. நீதி என்ன என்பதை அனைவரும் புரிந்து கொள்வது இன்றியமையாததாகிறது. இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் இன்னும் எளிமையான விளக்க உரையில் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. இதனை பள்ளிச் சிறுவர்கள் மட்டுமின்ற இன்றைய பெற்றோர்களும் படித்துப் புரிந்துக் கொண்டு, தங்கள் வாழ்க்கையை சரியானபடி அற வழியில் வாழவேண்டும், அத்துடன் இனிவருகின்ற இளைய தலைமுறைகளை சரியாகக் கொண்டு செல்ல வேண்டும் என்பதையும் இங்கு அறிவுறுத்தப் படுகின்றன.

நன்றி!

என்றும் அன்புடன்,
**ப்ரக்ருன்**

# உலகநாதர் அருளிய உலகநீதி

---

**பாடல் : 1**

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டு புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்

**தெளிவுரை**

1. பாடங்களைப் படிக்காமல் ஒரு நாளும் இருக்கக்கூடாது.
2. மற்றவர்களைப் பற்றி தவறாகப் பேசக்கூடாது.
3. பெற்ற தாயை ஒரு நாளும் மறக்கக்கூடாது.
4. கேடுகள் செய்பவர்களோடு சேரவே கூடாது.
5. தீயவர்கள் இருக்கின்ற இடங்களுக்குப் போகக்கூடாது.
6. அப்படிப் போகின்றவர்களைப் பற்றி மற்றவர்களிடம் வெளியே சொல்லக்கூடாது.

**பாடல் : 2**

நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்

**தெளிவுரை**

7. மனசாட்சி எனும் நம்முடைய உள்ளுணர்வுக்கு விரோதமாக, தெரிந்தே பொய் சொல்லக்கூடாது.
8. இது நடக்காது என்று தெரிந்திருந்தும், அந்த செயலைச் செய்துக் காட்டுகிறேன் என்று அதை நிலை நிறுத்த முயற்சிக்கூடாது.
9. விஷம் பொருந்திய சீவராசிகளுடன் ஒரு நாளும் பழகக்கூடாது.
10. நற்பண்பு இல்லாதவர்களிடம் நட்பு வைத்துக் கொள்ளக்கூடாது.
11. என்னுடைய வழி தனி வழி என பெரியவர்கள் பேச்சைக் கேட்கமால், அவர்களை எதிர்த்து தைரியமாகப் போகக்கூடாது.
12. அடுத்தவர்களுக்கு ஒரு நாளும் கெடுதல்களைக் கொடுக்கக் கூடாது.

**பாடல் : 3**

மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்
தனம்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
சினம்தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டாம்

**தெளிவுரை**

13. மனம் விரும்புகின்ற விசய, சுகங்களை எல்லாம் செய்யக் கூடாது.
14. பகைவன் நம்மிடம் நட்பாக இருக்கலாம் என்பதை நம்பக்கூடாது.
15. பணத்தை சம்பாதித்து அதை பயனுள்ள வழிகளில் பயன்படுத்தாமல், (தான, தர்மங்கள் செய்யாமல்) பதுக்கி வைக்கக்கூடாது.
16. அற வழியில் வாழ வேண்டும். அதை ஒரு நாளும் மறக்கக் கூடாது.
17. துன்பத்தில் முடியக்கூடிய கோபத்தை விட்டு விட வேண்டும்.
18. கோபமாக இருக்கின்றவர்களை கண்டால், அவர்கள் அருகே செல்லாமல், விலகி இருப்பது நல்லது.

**பாடல் : 4**

குற்றம்ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலைகளவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்
கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்

**தெளிவுரை**

19. மற்றவர்களிடம் உள்ள தவறுகளைப் பற்றி பலருடனும் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல.
20. கொலை, கொள்ளை செய்பவர்களைக் கண்டால் அவர்களை விட்டு விலகி இருப்பது நல்லது.
21. படித்தவர்களைப் பற்றி பழித்துப் பேசக்கூடாது
22. மற்றவர்கள் மனைவி/கணவன் மீது ஆசைக் கொள்வது தவறு.
23. ஆட்சி செய்பவர்களிடம் வாதம் செய்யக் கூடாது.
24. இறைவனை வெறுப்பவர்கள் இருக்கும் ஊரில் இருக்கக் கூடாது.

**பாடல் : 5**

வாழாமல் பெண்ணை வைத்துத்திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றமொன்றும் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரில் புறம்கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்

**தெளிவுரை**

25. கட்டிய மனைவியுடன் வாழாமால், கண்ட பெண்களிடம் உறவு வைத்துக் கொண்டு சுற்றித் திரியக் கூடாது.
26. மனைவியைப் பற்றி தவறாகப் பேசக் கூடாது.
27. தீய பழக்கங்கள் எனும் படுகுழியில் விழுந்து விடக்கூடாது.
28. சண்டைக்கு வருபவர்களிடம் பயந்து பின் வாங்கக் கூடாது.
29. கீழ்த்தரமான மனிதர்களிடம் சேர்க்கை வைக்கக்கூடாது.
30. நம்மைவிட தகுதி குறைவானவர்களைப் பற்றி, தவறாகப் பேசக் கூடாது.

**பாடல் : 6**

வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரியவேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர்சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்

**தெளிவுரை**

31. கெட்ட வார்த்தை பேசுபவர்களைப் பார்த்து, அவர்களுக்கு எதிராக நாமும் கெட்ட வார்த்தைகளைப் பேசக் கூடாது.
32. நம்மை மதிக்காதவர்கள் வீட்டிற்கு செல்லக் கூடாது.
33. நம்மை விட வயதில் பெரியவர்கள்/ அனுபவஸ்தர்கள் சொல்லும் அறிவுரைகளை மறந்து விடக் கூடாது.
34. எதெற்கெடுத்தாலும் கோபம் கொள்ளும் மனிதனிடம் நட்பு வைத்துக் கொள்ளக்கூடாது.
35. ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய குரு தட்சணையைக் கொடுக்காமல், வைத்துக் கொள்ளக் கூடாது.
36. வழிப்பறியில் ஈடுபடும் திருடர்களோடு சேரக்கூடாது.

**பாடல் : 7**

கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கழிவை ஒருநாளும் பேச வேண்டாம்
பொருவார்தம் போர்க்களத்தில் போக வேண்டாம்
பொதுநிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்
எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்

**தெளிவுரை**

37. திட்டமிடல் இல்லாமல், எந்த செயலையும் செய்யக் கூடாது.

38. மற்றவர்களுக்குச் செய்த பொருளாதார உதவியைப் பற்றி ஒரு நாளும் சொல்லிக் காட்டக்கூடாது.

39. இளகிய மனம் கொண்டவர்கள் ஒரு நாளும் சண்டை, சச்சரவுகளில் ஈடுபடக்கூடாது.

40. புறம்போக்கு நிலத்தை ஒரு நாளும் கைப்பற்றக் கூடாது.

41. இரண்டாம் திருமணத்தை ஒரு நாளும் விரும்பக் கூடாது.

42. வறுமையில் உள்ளவர்களைப் பகைவர்களைப் போல பார்க்கக்கூடாது.

**பாடல் : 8**

சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்

**தெளிவுரை**

43. கெட்ட பழக்க, வழக்கங்களைக் கொண்டவர்களோடு சேரக்கூடாது.
44. மற்றவர்கள் செய்த உதவியை ஒரு நாளும் மறக்கக் கூடாது.
45. ஊரில் உள்ளவர்களோடு கலகங்களைச் செய்துக் கொண்டு இருக்கக் கூடாது.
46. நமக்கு வேண்டியவர்களை அவமரியாதை செய்யக் கூடாது.
47. நற்பெயரை உண்டாக்குகின்ற நன்மை தரும் செயல்களை செய்யாமல் இருக்கக் கூடாது.
48. கெட்ட செயல்களுக்கு துணைப் போகக் கூடாது.

**பாடல் : 9**

மண்நின்று மண்ஓரம் சொல்ல வேண்டாம்
மனம்சலித்து சிலுக்கிட்டு திரிய வேண்டாம்
கண்அழிவு செய்துதுயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைகளை சொல்ல வேண்டாம்
புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்க வேண்டாம்

**தெளிவுரை**

49. விவசாய விளை நிலத்தில் வரப்பு தகராறு வரும்படியான வார்த்தைகளைச் சொல்லக் கூடாது.

50. மனம் விரக்தியினால், வீணான விவகாரங்களில் ஈடுபடக் கூடாது.

51. கண்களில் கண்ணீர் விட்டு, நம் கஷ்டங்களைக் காட்டக் கூடாது.

52. நம் காதுகள் நேரடியாகக் கேட்காத வார்த்தைகளை வைத்துக் கொண்டு, அதை கட்டுக்கதைகளாக திரித்துச் சொல்வது கூடாது.

53. மற்றவர்கள் மனம் நோகும்படி வார்த்தைகளைப் பேசக் கூடாது.

54. மற்றவர்களைப் பற்றி அவதூறாகப் பேசிக் கொண்டிருப்பவர்களோடு சேரக் கூடாது.

**பாடல் : 10**

மறம்பேசித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய்தன்னை சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்

**தெளிவுரை**

55. வீணான வாதங்கள் பேசி, வலுச்சண்டைக்கு வருபவர்களோடு சேரக் கூடாது.

56. வழக்கில் பொய் சாக்ஷி சொல்வதற்கு போகக் கூடாது.

57. தகாத வார்த்தைகளினால், சண்டை, சச்சரவுகளில் ஈடுபடக் கூடாது.

58. தெய்வீகமானவர்களை ஒரு நாளும் மறக்கக் கூடாது.

59. இறக்கும் நிலை வந்தாலும், பொய் மட்டும் பேசக் கூடாது.

60. நம்மீது குற்றம் கூறிய உற்றார், உறவினர்களிடம் உதவி கேட்கக் கூடாது.

**பாடல் : 11**

அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அதுஏது இங்குஎன்னில் நீசொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன் தன்கூலி
சகலகலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சறுத்த மருத்துவச்சி கூலி
மகாநோவு தனைதீர்த்த மருத்துவன் கூலி

**தெளிவுரை**

ஐந்து பேர்களுக்கு கொடுக்க வேண்டிய கூலியை நிறுத்தி வைக்கக் கூடாது. உடனடியாக அவர்களுக்குக் கொடுத்து விட வேண்டும்.

அந்த ஐவரும் யாரெனில், துணிகளை வெளுத்துக் கொடுக்கும் **சலவைத் தொழிலாளி,** நம்முடைய தலை முடியை சரி செய்யும் **முடி திருத்தம் செய்பவர்,** சகல கலைகளையும் கற்றுக் கொடுக்கும் **ஆசிரியர்,** குழந்தை நல்லவிதமாகப் பிறந்து, அதன் நஞ்சை அகற்ற உதவிய, பிரசவம் பார்த்த **செவிலியர்,** கொடிய நோய்களை நீக்குகின்ற **மருத்துவர்** என இவர்கள் ஐந்து பேருக்கும் கொடுக்க வேண்டிய கூலியை உடனடியாகக் கொடுத்துவிட வேண்டும்.

**பாடல் : 12**

கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்க வேண்டாம்

**தெளிவுரை**

61. ஒரு குடும்பத்தை பிளவுப் படுத்தும் செயலைச் செய்யக் கூடாது.

62. கொண்டைமேல் பூவை வைத்துக் கொள்ளக்கூடாது.

**(பொதுவாக, முடிகளை ஒன்றாகச் சேர்த்து கொண்டை போட்டுக் கொண்ட பிறகு, அதன்மீது பூக்கள் சூடும் போது, பூக்களில் உள்ள புழுக்கள், பூச்சிகள், அந்த முடிகளுக்குள் சென்று ஒளிந்துக் கொள்ளும், அது தெரியாமல், இரவு நேரங்களில் கொண்டைக் களைந்து, தூங்கும்போது, அந்த பூச்சி, புழுக்கள் போன்றவைகள் நம் காதுகளில் நுழைந்துவிட வாய்ப்புகள் உள்ளது. அது, சில நேரங்களில் ஆபத்தில் முடியலாம்.)*

63. அனைத்து விசயங்களிலும் தலையிட்டு, அவதூறுகளைப் பேசிக் கொண்டு திரியக் கூடாது.

64. தீய ஜனங்களாகத் திரிபவர்களோடு சேரக் கூடாது.

65. நற்பண்புகளைப் பொருந்திய நல்ல தெய்வீகமானவர்களின் நற்பெயரைக் கெடுக்கும்படி, அவர்களைப் பற்றி இழிவாகப் பேசக் கூடாது.

66. வெற்றிப் பெற்ற பெரியவர்களை வெறுக்க வேண்டாம்.

**பாடல் : 13**

ஆதரித்துப் பலவகையால் பொருளும் தேடி
அருந்தமிழால் அறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடிவைத்த உலகநீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று மிகவாழ்ந்து புகழுந்தேடி
பூலோகம் உள்ளளவும் வாழ்வர் தாமே.

**தெளிவுரை**

அனைவராலும் ஆதரிக்கப்பட்டு, அதன் வாயிலாகப் பலவகையிலும் பயன்படக்கூடிய பயனுள்ள பொருளைத் தேடிய உலகநாதனாகிய நான் கற்ற கல்வியால், அருந்தமிழில் ஆறுமுருகனைப் பாட வேண்டி, அவன் திருவருளால் உண்மையாகப் பாடி வைத்த, இந்த உலக நீதி பாடல்களைப் படிக்க விரும்பி, அதன் பொருள் தெரிந்து, தினந்தோறும் கற்பவர்களும், கேட்பவர்களும், இந்த பூலோகம் உள்ளவரை, புகழோடும், சுக, போகங்களோடும் வாழ்வார்களாக.

**உலகநீதி மூலமும், உரையும் நிறைவடைந்தது.**

உலகநாதர்
அருளிய

# உலகநீதி



ப்ரக்ஞன்